ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இலவச
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனிக்கிழமை, ஆகஸ்ட் 05, 2023 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 22

# மணிப்பூரில் வன்முறையை கட்டுப்படுத்தத் தவறிய மத்திய அரசைக் கண்டித்து மநீம ஆர்ப்பாட்டம்



சென்னை, ஆகஸ்ட் 05, 2023: மக்கள் நீதி மய்ய பொதுச்செயலாளர் ஆ. அருணாசலம் விடுத்துள்ள அறிக்கையில், மணிப்பூரில் நடக்கும் இனக்கலவரம், வன்முறை, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளைத் தடுக்கத் தவறிய மத்திய அரசைக் கண்டித்தும்; சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ள மணிப்பூர் மாநில அரசைக் கலைத்திட வலியுறுத்தியும் மக்கள் நீதி மய்யத்தின் ஆர்ப்பாட்டம் வருகிற 06-08-2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10 மணியளவில் சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களுக்கு வள்ளுவர் கோட்டத்திலும், கோவை மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களுக்கு கோயம்புத்தூரிலும், காஞ்சி மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களுக்கு காஞ்சிபுரத்திலும், மதுரை மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களுக்கு மதுரையிலும், சேலம் மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களுக்கு சேலத்திலும், திருச்சி மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களுக்கு நாகப்பட்டினத்திலும், நெல்லை மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களுக்கு திருநெல்வேலியிலும் மற்றும் விழுப்புரம் மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களுக்கு திட்டக்குடியிலும் நடைபெறவுள்ளது. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மநீம மாநில, மண்டல, மாவட்ட, ஒன்றிய, நகர, வட்ட, கிளை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி! நாளை நமதே! என்று தெரிவித்துள்ளார்.

# மு க ஸ்டாலின் மவுன ஊர்வலம்! வாலாஜா சாலைக்கு வரும் போது வாகனங்கள் அண்ணாசிலையில் இருந்து பொரியார் சிலை நோக்கி திருப்பி விடப்படும்



சென்னை ஆகஸ்ட் 05 2023: வரும் 07.08.2023 அன்று காலை 08.00 மணியளவில் தமிழக முதலமைச்சர், தமிழக அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தி.மு.க. உறுப்பினர்கள் அண்ணாசாலை ஓமந்தூரார் வளாகத்தில் உள்ள கலைஞர் மு.கருணாநிதி சிலை அருகிலிருந்து மொரினா கடற்கரையில் உள்ள கலைஞர் மு.கருணாநிதி நினைவிடம் வரை மவுன ஊர்வலம் செல்ல உள்ளார்கள். இது தொடர்பாக விரிவான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டு வாகனங்கள் எளிதாக செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனினும் தேவைப்படும் பட்சத்தில் போர் நினைவு சின்னத்தில் இருந்து நேப்பியார் பாலம் நோக்கி வரும் வாகனங்கள் காமராஜர் சாலை செல்ல அனுமதிக்காமல் கொடி மரச் சாலை வழியாக திருப்பி விடப்படும். காந்தி சிலையில் இருந்து காமராஜர் சாலை நோக்கி வரும் வாகனங்கள் கண்ணகி சிலை வரை அனுமதிக்கப்பட்டு பாரதிசாலை வழியாக திருப்பி விடப்படும். மவுன ஊர்வலம் வாலாஜா சாலைக்கு வரும் போது வாகனங்கள் அண்ணாசிலையில் இருந்து பொரியார் சிலை நோக்கி திருப்பி விடப்படும். அதனால் காலை நேரத்தில் அண்ணாசாலை, வாலாஜா சாலை, டேம்ஸ் சாலை, பிளாக்கர்ஸ் சாலை மற்றும் காமராஜர் சாலையில் போக்குவரத்து நொரிசல் ஏற்பட வாய்ப்புள்ளது. வாகன ஓட்டிகள் இந்த சாலைகளை தவிர்த்து மாற்று வழியில் பயணத்தை திட்டமிடலாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

வாகன ஓட்டிகள் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# இராமநாதபுரத்தில், ஆகஸ்ட் - 17 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் திமுக தலைவர் பங்கேற்கும் தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறைக் கூட்டம் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு

சென்னை, ஆகஸ்ட் 05, 2023: தமிழ்நாடு முதலமைச்சர், திமுக தலைவர் தலைமையில் கடந்த 22.03.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் "முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களை சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல்" உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேற்கண்ட தீர்மானங்களின்படி, கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாக சரிபார்க்கப்பட்டுள்ளது.

திமுக தலைவர் அறிவுரையின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கென "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் ஒரு நாள் பயிற்சி பாசறைக் கூட்டம்" நடத்திட முடிவெடுக்கப்பட்டு, முதலாவதாக கடந்த ஜூலை 26 அன்று திருச்சியில் டெல்டா மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து;

தென் மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறைக் கூட்டம்" வருகிற 17-08-2023 (வியாழக்கிழமை) அன்று இராமநாதபுரம், தேவிப்பட்டினம் சாலை, பேராவூர் என்ற இடத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றிட நடைபெற உள்ளது.

தென் மண்டலத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள 19 கழக மாவட்டங்களின், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தத்தமது மாவட்டங்களுக்குட்பட்ட 'வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்தை' கூட்டி, இப்பயிற்சி பாசறைக் கூட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்து, தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

1.இராமநாதபுரம் 2.சிவகங்கை 3.திண்டுக்கல் கிழக்கு 4.திண்டுக்கல் மேற்கு 5.தேனி வடக்கு 6.தேனி தெற்கு 7.மதுரை மாநகர் 8.மதுரை வடக்கு 9.மதுரை தெற்கு 10.விருதுநகர் வடக்கு 11.விருதுநகர் தெற்கு 12.திருநெல்வேலி கிழக்கு 13.திருநெல்வேலி மத்திய 14.தென்காசி வடக்கு 15.தென்காசி தெற்கு 16.தூத்துக்குடி வடக்கு 17.தூத்துக்குடி தெற்கு 18.கன்னியாகுமரி கிழக்கு 19.கன்னியாகுமரி மேற்கு.

# தமிழகத்தில் 'என் மண், என் மக்கள்' பாதயாத்திரையை அமித்ஷா தொடங்கி வைத்தார்



சென்னை, ஆகஸ்ட் 05, 2023: மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவு அமைச்சரும், பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவருமான அமித் ஷா கடந்த வெள்ளிக்கிழமை ராமேஸ்வரத்தில் பாஜகவின் மாநிலம் தழுவிய 6 மாத கால 'என் மண், என் மக்கள்' (என் நிலம், என் மக்கள்) பாதயாத்திரையை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்தப் பயணம் தமிழ்நாட்டை வாரிசு அரசியல் மற்றும் ஊழலில் இருந்து விடுவிக்கும் அதே வேளையில், நாடு முழுவதும் உள்ள தமிழ் கலாச்சாரத்திற்கு அதிக அங்கீகாரத்தை அளிக்கும் என்றும் இது வெறும் அரசியல் பாதயாத்திரை அல்ல என்றும் தொடக்க விழாவில் அமித் ஷா வலியுறுத்தினார். மாநிலத்தில் உள்ள 39 பாராளுமன்ற தொகுதிகள் மற்றும் 234 சட்டசபை தொகுதிகளை உள்ளடக்கிய பாதயாத்திரை ஜனவரி 11, 2024 அன்று முடிவடைகிறது. கூட்டத்தில் உரையாற்றிய அமித் ஷா எதிர்க்கட்சிகளின் கூட்டணியையும் கடுமையாக சாடினார்.

அமித் ஷாவின் 'என் மண், என் மக்கள்' பாதயாத்திரை 2024 தேர்தலுக்கான எதிர்பார்ப்பை உயர்த்தியுள்ளது. பாஜகவின் தலைமை தேர்தல் வியூகவாதியாக பணியாற்றும் அமித் ஷா, தொடர்ந்து கட்சியை வெற்றிப் பாதைக்கு வழிநடத்தி, உலக அளவில் மிகப்பெரிய அரசியல் கட்சியாக மாற்றினார். கடந்த 9 ஆண்டுகளாக, பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையுடனும், மத்திய உள்துறை மற்றும் ஒத்துழைப்பு அமைச்சர் அமித் ஷாவின் வழிகாட்டுதலுடனும், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு சாதி வெறி, குடும்பவாதம், திருப்திப்படுத்தல் மற்றும் பிராந்தியவாதம் ஆகியவற்றில் செயல்திறன் அடிப்படையிலான அரசியலுக்கு முன்னுரிமை அளித்துள்ளது.

தொடக்க விழாவில் பேசிய அமித்ஷா பேசுகையில், இன்று திமுகதான் ஊழல் மிகுந்த அரசியல் கட்சியாக உள்ளது, அதன் அமைச்சர் பல கோடி ஊழல்களில் ஈடுபட்டு சிறையில் இருக்கிறார். ஆனால், ஸ்டாலின் அரசில் அமைச்சராக பதவி வகித்து வருகிறார். சிறையில் இருக்கும் அமைச்சரிடம் இருந்து ஸ்டாலின் அரசு ஏன் ராஜினாமா கோரவில்லை என்பதை தமிழக மக்கள் மட்டுமல்லாது நாடு முழுவதும் உள்ள மக்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். தேர்தலில் வெற்றி பெற 500க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை அளித்த ஸ்டாலின், வெற்றி பெற்ற பிறகு அதில் ஒன்றைக் கூட நிறைவேற்றவில்லை. ஸ்டாலின் அரசு வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை விட, மது, போதைப்பொருள், கஞ்சா வியாபாரத்தில் தமிழகம் முழுவதையும் மூழ்கடித்துள்ளது. வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், வாக்குறுதிகளை அள்ளி வீசும் ஸ்டாலினின் அரசியல் அணுகுமுறையை தமிழக மக்கள் உணர்ந்துள்ளனர்.

இன்று, நாட்டில் உள்ள மக்கள் பாஜகவின் வல்லமைமிக்க தலைவரான அமித்ஷாவை, நவீன கால சாணக்கியர் என்று அழைக்கின்றனர். எதிர்க்கட்சிக் கூட்டணியின் பெயர் மாறினாலும் 2ஜி ஊழல், காமன்வெல்த் ஊழல், நிலக்கரி ஊழல், ஹெலிகாப்டர் ஊழல், நீர்மூழ்கிக் கப்பல் ஊழல், இஸ்ரோ ஊழல் போன்றவற்றை மக்களிடம் வாக்கு கேட்கும் போதெல்லாம் மக்கள் நினைவு கூர்வார்கள் என்றும் எதிர்க்கட்சிகள் இந்தியாவை வளர்க்க விரும்பவில்லை, அவர்கள் தங்கள் குடும்பத்தை மட்டுமே வளர்க்க விரும்புகிறார்கள். சோனியா காந்தி தனது மகன் ராகுல் காந்தியை பிரதமராக்க விரும்புகிறார். ஸ்டாலின் தனது மகன் உதயநிதியை முதல்வராக்க விரும்புகிறார். லாலு யாதவ் தனது மகன் தேஜஸ்வி யாதவை முதல்வராக்க விரும்புகிறார். மம்தா பானர்ஜி தனது மருமகன் அபிஷேக் பானர்ஜி முதல்வராக வேண்டும் என்று விரும்புகிறார். மேலும் உத்தவ் தாக்கரே தனது மகன் முதல்வராக வேண்டும் என்று விரும்புகிறார். இவர்கள் அனைவரும் இந்தியாவை வலிமையாக்க விரும்பவில்லை, ஆனால் தங்கள் மகன்கள், மகள்கள் மற்றும் மருமகன்களுக்கு அதிகாரம் அளிக்க விரும்புகிறார்கள். என்று அமித்ஷா கூறினார்.

சுதந்திரம் அடைந்ததில் இருந்து, 370வது பிரிவு மற்றும் ராமர் கோவில் போன்ற பிரச்னைகளில் காங்கிரஸின் அணுகுமுறை எதிர்மறையாகவே உள்ளது. காங்கிரசு ஆட்சியில் இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதையும், அவர்கள் காலத்தில் தமிழக மீனவர்களின் அவல நிலை ஏற்பட்டதையும் தமிழக மக்கள் மறக்க முடியாது. ஆனால் மோடி ஜியின் இரண்டாவது ஆட்சியில், அமித்ஷாவின் வழிகாட்டுதலின் பேரில், 370 வது பிரிவும் ரத்து செய்யப்பட்டது, மேலும் ராமர் கோவில் பிரச்சினையும் தீர்க்கப்பட்டது. இந்த மாற்றத்தின் அலையை நாட்டின் பொதுமக்கள் பார்த்துள்ளனர் என்று அமித்ஷா தெரிவித்தார்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# அஜய் அர்ஜுன் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் டாக்டர் அர்ஜுன் வழங்கும், பிரபல எழுத்தாளர்-நடிகர் அஜயன் பாலா எழுதி இயக்கும் திரைப்படம் தொடக்கம்



சென்னை, ஆகஸ்ட் 05, 2023: பல்வேறு வெற்றிப் படங்களின் திரைக்கதை மற்றும் வசன எழுத்தாளரும், நடிகருமான அஜயன் பாலா இயக்குநராக அறிமுகம் ஆகும் திரைப்படத்தை அஜய் அர்ஜுன் புரொடக்ஷன்ஸ் தயாரிக்க டாக்டர் அர்ஜுன் வழங்குகிறார்.

மலைப் பிரதேசத்தை பின்னணியாக கொண்ட அழகான காதல் கதையான இப்படத்தின் பூஜை இன்று நடைபெற்றது. செப்டம்பர் 1 அன்று படப்பிடிப்பு துவங்கி தொடர்ந்து நடைபெற உள்ளது.

திரைக்கதை எழுத்தாளர், வசனகர்த்தா மற்றும் நடிகர் என கடந்த 20 வருடங்களாக தமிழ் திரை உலகில் பல்வேறு பரிமாணங்களில் இயங்கி வரும் அஜயன் பாலா, 'சித்திரம் பேசுதடி', 'பள்ளிக்கூடம்', 'மதராசபட்டினம்', 'தெய்வத்திருமகள்', 'மனிதன்', 'சென்னையில் ஒரு நாள்', 'லக்ஷ்மி', 'தலைவி', உள்ளிட்ட திரைப்படங்களில் முக்கிய பங்காற்றி உள்ளது குறிப்பிடத்தக்கது.

2017ம் ஆண்டு வெளிவந்த 'ஆறு அத்தியாயம்' திரைப்படத்தில் இடம்பெறும் ஆறு கதைகளில் ஒன்றை இயக்கி உள்ள அஜயன் பாலா, தற்போது இந்த புதிய திரைப்படத்தின் மூலம் முழு நீள திரைப்படம் ஒன்றை முதல் முறையாக எழுதி இயக்குகிறார்.

நல்ல கதையின் மீது பெரும் நம்பிக்கை வைத்து தமிழ் சினிமாவின் தரமான கலைஞர்களை கொண்ட கூட்டணி இப்படத்திற்காக கைகோர்த்துள்ளது. செழியன் ஒளிப்பதிவை கவனிக்க, ஸ்ரீகர் பிரசாத் படத்தொகுப்புக்கு பொறுப்பேற்க, லால்குடி இளையராஜா கலை இயக்கத்தை கையாள, சித்து குமார் இப்படத்திற்கு இசையமைக்கிறார்.

'கன்னிமாடம்' படத்தில் நடித்துள்ள ஸ்ரீராம் கார்த்திக் நாயகனாக நடிக்கும் இப்படத்தில், 'கோலிசோடா 2' புகழ் கிரிஷா குருப் நாயகியாக நடிக்கிறார். யோகி பாபு மற்றும் முனீஷ்காந்த் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர்.

திரைப்படம் குறித்து பேசிய இயக்குநர் அஜயன் பாலா, "மனதைத் தொடும் காதல் கதை ஒன்றை மலைப்பகுதியின் பின்னணியில் மக்களுக்கு சொல்ல உள்ளோம். கதையை மட்டுமே நம்பி என்னுடன் இணைந்துள்ள தொழில்நுட்ப கலைஞர்கள் மற்றும் நடிகர்களுக்கும் இப்படத்தை தயாரிக்கும் மருத்துவர் அர்ஜுன் அவர்களுக்கும் நன்றி. திரைப்படத்தின் தலைப்பு மற்றும் இதர தகவல்கள் விரைவில் வெளியிடப்படும்," என்றார்.

# மாலை 6 மணிக்கு மேல் தொலைக்காட்சி தொடர்களை பார்க்க கூடாது, மதுபானக்கடையில், ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒரு கட்டிங்




சென்னை, ஆகஸ்ட் 05, 2023: சினிமா என்பது ஒரு வணிகக் கலை என்றாலும் உருவாகும் ஒவ்வொரு படங்களிலும் ஒரு செய்தி இருக்க வேண்டும் அப்படியானதொரு நற்சிந்தனையை தூவும் படமே 'சான்றிதழ்'. அதாவது இப்படத்தின் இயக்குநர் காட்டும் கிராமத்தின் சட்டங்கள் அரபு நாடுகளை மிஞ்சும் அளவுக்கு இருக்கிறது. குறிப்பாக, மாலை 6 மணிக்கு மேல் யாரும் தொலைக்காட்சி தொடர்களை பார்க்க கூடாது, என்ற கட்டுப்பாடு ., மதுபானக்கடையில், ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒரு கட்டிங் (குவாட்டரில் பாதி) மட்டுமே அனுமதி என்ற கட்டுப்பாடு .,- இப்படி பல ரகத்தில் இருக்கும் கட்டுப்பாடுகள் காமெடி ரகமாக இருந்தாலும், அப்படியொரு நாடு அல்லது கிராமம் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று ஏங்க வைப்பதில் ஜெயித்து விட்டார்கள் இந்த சான்றிதழ் டீம்.

அதாவது திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கருவறை என்ற கிராம மக்கள் தங்களுக்கு என்று தனி சட்டங்களை வகுத்துக் கொண்டு ஒழுக்கமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்து வருகிறார்கள். கருவறை கிராமத்தின் இத்தகைய சிறப்பை அறிந்து மத்திய அரசு சிறந்த கிராமத்திற்கான விருதை அறிவிக்கிறது, ஆனால் அதை அந்த விருதை கிராம மக்கள் வாங்க மறுத்து விடுகிறார்கள். இதனால், ஆத்திரமடையும் அமைச்சர் கருவறை கிராமத்தின் மீது களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கிறார். அமைச்சரின் முயற்சிகளும், கிராம மக்கள் விருதை ஏற்க மறுப்பதற்கான காரணமும், ஒரு பக்கம் இருக்க, தறுதலை கிராமமாக இருந்த அந்த ஊரை கருவறை கிராமமாக மாற்றியதற்கு பின்னாள் வெள்ளைச் சாமி என்பவரது மிகப்பெரிய தியாகத்தையும், அவர் தனது கனவு கிராமத்தை உருவாக்க இழந்ததையும், சொல்வது தான் 'சான்றிதழ்' படத்தின் கதை.

வெள்ளை வேட்டி, சட்டை மட்டும் இன்றி உள்ளத்திலும் வெண்மையோடு வலம் வரும் வெள்ளச்சாமி என்ற கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் ஹரி, தனது கிராம மக்களின் அவல நிலையை கண்டு கலங்கும் காட்சிகளில் அறுமையாக நடித்துள்ளார். கருவறை கிராமத்து இளைஞராக நடித்திருக்கும் ரோஷன் பஷீர் – நிருபராக வரும் ஆஷிகா அசோகன் ஆகியோரது காதல் காட்சிகளாள் படம் குளிர்ச்சியாக இருக்கிறது. மினிஸ்டர் வேடத்தில் வரும் ராதாரவி, அருள்தாஸ், நடிகை கௌசல்யா ஆகியோர் தங்களது அனுபவமான நடிப்பு மூலம் படத்திற்கு பலம் சேர்த்திருக்கிறார்கள். ரவி மரியா கவனம் ஈர்கிறார்.. மனோபாலா மற்றும் ஆதித்யா கதிர் வரும் காட்சிகளில் அறுமை. தனிஷா குப்பண்டா, ஆதித்யா கதிர், காஜல் பசுபதி, உமா ஸ்ரீ என படத்தில் நடித்திருக்கும் ஏனைய நட்சத்திரங்கள் நன்றாக நடித்துள்ளனர்.

கேமராமேன் எஸ்.எஸ்.ரவிமாரன் சிவன், பருந்து கோணத்தில் முழு கிராமத்தையும், பாடல் காட்சிகளையும் அழகியலோடு படமாக்கி ரசிக்க வைத்திருக்கிறார். பிஜு ஜேக்கப்பின் இசையில் பாடல்களும் , பின்னணி இசையும் நன்றாக உள்ளது.

ஒரு சினிமா மூலம் ஒவ்வொரு மனிதனுக்கும் தனி மனித ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு மிக முக்கியம் என்றும், அப்படி இருந்தால் ஒட்டு மொத்த ஊரே கட்டுப்பாட்டுடனும், ஒழுக்கத்துடனும் இருக்கும், என்ற அரிய கருத்தை விதைத்திருக்கும், இந்த 'சான்றிதழ்' – சூப்பர்.

# ராகுல் காந்தியின் தண்டனை நிறுத்தி வைப்பு: சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்கு ஸ்டாலின் வரவேற்பு



சென்னை ஆகஸ்ட் 05 2023: ராகுல் காந்தியின் தண்டனையை நிறுத்தி வைத்து சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

2019- நாடாளுமன்ற தேர்தலில், பிரதமர் மோடி குறித்து பேசிய பேச்சு மோடி சமூகத்தையே இழிவு படுத்திவிட்டதாக தொடரப்பட்ட அவதூறு வழக்கில் சூரத் கோர்ட் ராகுல்காந்திக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இதையடுத்து அவரது எம்.பி. பதவியும் பறிக்கப்பட்டது.

சூரத் கோர்ட்டின் தீர்ப்பை எதிர்த்து குஜராத் ஐகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கில் ராகுல்காந்திக்கு அளிக்கப்பட்ட 2 ஆண்டுகள் சிறை தண்டனையை நிறுத்தி வைத்து சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கி உள்ளது.

இதற்கு வரவேற்பு தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைத்தள பதிவில் கூறியிருப்பதாவது:-

நீதி வென்றது! வயநாடு ராகுல்காந்தியைத் தக்க வைத்துக்கொண்டது.

அவதூறு வழக்கில் சகோதரர் ராகுல்காந்திக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைக்கும் சுப்ரீம் கோர்ட்டின் முடிவை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். இந்த உத்தரவு நமது நீதித்துறையின் வலிமை மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையையும், மக்களாட்சியின் மாண்புகளைக் காப்பாற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தையும் மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வேலைக்கு போகும் தாய்மார்களை வேலை இடைவேளையில் தாய்ப்பால் கொடுப்பதை ஊக்குவிப்பதின் மூலம் மாற்றத்தை ஏற்படுத்துங்கள்

## டாக்டர் ஜெயஸ்ரீ ஜெயகிருஷ்ணன், இயன்முறை மருத்துவர் ஃபோர்டிஸ் மலர் மருத்துவமனை, அடையாறு



சென்னை, ஆகஸ்ட் 05, 2023: தாய் மற்றும் சேய் இருவருக்கும் தாய்ப்பால் கொடுக்கும் உரிமை உள்ளது. இருப்பினும், பணிபுரியும் பெண்கள் தாங்கள் தாய்ப்பாலூட்டுவதற்கான விருப்பத்திற்கும் அவர்களின் வேலையின் கடமைகளுக்கும் இடையில் சமநிலையை ஏற்படுத்துவது கடினம். 'சூப்பர் வுமன்' இல்லத்தரசியாகவும், மற்றும் பணியாற்றுபவராகவும் இருக்கிறார். இந்த இரண்டு பொறுப்புகளுக்கும் இடையில் ஒரு சமநிலையைக் கண்டறிவது அவளுக்கு சவாலான விஷயமாகும். அவர்கள் வீட்டிற்கு வெளியே வேலை செய்வதோடு கூடுதலாக நேரத்தை ஒதுக்கி வீட்டு வேலைகளையும் செய்ய வேண்டும், மேலும் அவர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டவும் வேண்டும்.

கேள்விக்கு இடமின்றி, ஊட்டச்சத்து மற்றும் தாய்-சேய் பிணைப்பை எளிதாக்குவதுடன், குழந்தையின் பாதுகாப்பில் தாய்ப்பால் மிக முக்கியமான காரணியாக உள்ளது. கீபிளி இன் கூற்றுப்படி, 6 மாதங்களுக்கும் குறைவான குழந்தைகளில் 40% மட்டுமே உலகளவில் பிரத்தியேகமாக தாய்ப்பால் கொடுக்கப்படுகிறது, இது கவலைக்குரிய விஷயமாகும். 2025 ஆம் ஆண்டளவில், உலக சுகாதார சபையின் தீர்மானம் 6 மாதங்களுக்கும் குறைவான குழந்தைகளில் குறைந்தது 50% குழந்தைகளுக்கு பிரத்தியேகமாக தாய்ப்பால் கொடுக்க வேண்டும் என்ற இலக்கை தெளிவாக நிர்ணயித்துள்ளது. இந்த நோக்கத்தை அடைவதற்கு பணியில் தாய்மார்களுக்கு நிறுவனம் மற்றும் சக ஊழியர்களின் ஆதரவு மிகவும் முக்கியமானது.

இந்த ஆண்டிற்கான உலக தாய்ப்பால் வாரத்தின் (கீஙிகீ) கருப்பொருள், "தாய்ப்பால் ஊட்டுதலை ஊக்குவித்தல் - பணிபுரியும் பெற்றோரின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துதல்", தாய்ப்பால் கொடுப்பதை பாதுகாக்கும், ஆதரிக்கும் மற்றும் ஊக்குவிக்கும் அமைப்புகளின் முக்கியத்துவத்தை ஆராய்கிறது. இந்தக் கட்டுரையில், ஃபோர்டிஸ் மலர் மருத்துவமனையின் இயன்முறை மருத்துவ நிபுணர் டாக்டர் ஜெயஸ்ரீ ஜெயகிருஷ்ணன், ஒரு அமைப்பு தாய்ப்பால் கொடுப்பதை எவ்வாறு ஆதரிக்கலாம் என்பதை விளக்குகிறார் மற்றும் பணிபுரியும் பெண்களுக்கு உதவிக்குறிப்புகளை வழங்குகிறார்.

நிறுவனங்களின் பங்கு:

அ) தாய்ப்பாலூட்டும் இடம் மற்றும் உள்கட்டமைப்பு:

பாலூட்டும் அறையானது தேவையான வசதிகளுடன் கூடிய ஒரு பிரத்யேக இடமாக இருக்க வேண்டும், அங்கு அம்மாக்கள் தங்கள் குழந்தைகளுக்கு பிரத்தியேகமாக பாலூட்டலாம் மற்றும் சேமித்து வைக்கலாம். பெண்கள் தாய்ப்பால் கொடுக்கும் பகுதி சுத்தமாகவும், அணுக்கள் கூடியதாகவும், பாதுகாப்பாகவும், தனிப்பட்டதாகவும் இருக்க வேண்டும். பணியிடத்தில் தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவிக்க முதலாளிகள் அதிகபட்ச பாலூட்ட இடைவேளை மற்றும் மேலாளர்களுக்கு பயிற்சியும் அளிக்க வேண்டும்..

ஆ) தனிமை, அணுகல் மற்றும் பாதுகாப்பு:

தாய்ப்பால் கொடுக்கும் அறை தாய்மார்களுக்கு எளிதாக அணுகக்கூடியதாக இருக்க வேண்டும், கழிவறைகளிலிருந்து விலகி இருக்க வேண்டும் மற்றும் பாலூட்டுவதிற்கு தேவையான கருவிகளுடன் பணியிடத்திற்கு அருகில் இருக்க வேண்டும். ஒரு அமைதியான மற்றும் வசதியான சூழ்நிலையில், பெரும்பாலும் வெளிச்சம் மற்றும் காற்றோட்டம் நிறைந்ததாவும் இருக்க வேண்டும்; அதை உறுதியும் செய்ய வேண்டும். கூடுதலாக, தனியுரிமை பாதுகாக்கப்பட வேண்டும், எனவே நுழைவாயில்கள் சரியாக மூடப்பட்டிருக்க வேண்டும் மற்றும் வெளியில் இருந்து பார்க்க முடியாதபடி இருக்க வேண்டும்.

பாலூட்டும் தாய்மார்களுக்கு:

அ) மகப்பேறு விடுப்பை நீட்டிக்கவும்:

இந்திய சட்டத்தின்படி, ஒரு புதிய தாய்க்கு 26 வாரங்கள் வரை ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்புக்கு உரிமை உண்டு. எனவே, உங்கள் குழந்தையுடனான பிணைப்பை வலுப்படுத்த இந்த வாய்ப்பை பயன்படுத்துங்கள். முதல் ஆறு மாதங்களுக்கு, குழந்தைகளுக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும் என்று குழந்தை மருத்துவர்கள் அறிவுறுத்துகிறார்கள். இருப்பினும், உங்கள் குழந்தைக்கு தாய்ப்பாலின் முழுமையான பாதுகாப்புப் பலன்களை வழங்க இரண்டு வயது வரை நீங்கள் தொடர்ந்து பாலூட்டலாம். ஆறு மாத காலத்திற்கு முன் நீங்கள் வேலைக்குத் திரும்ப வேண்டியிருந்தால், பணியிடத்தில் ஒரு நியமிக்கப்பட்ட பாலூட்டும் அறைப் பகுதியை ஏற்பாடு செய்யும்படி உங்கள் முதலாளியிடம் அல்லது மேலாளரிடம் கேட்கலாம், அதனால் உங்கள் குழந்தைக்கு நீங்கள் தொடர்ந்து பாலூட்டலாம்.

ஆ) வேலையில் சாத்தியக்கூறுகள் மற்றும் வரம்புகளை நிறுவுதல்:

நீங்கள் வேலை செய்யத் தொடங்கியவுடன், உங்கள் மேலாளரிடம் திட்டமிடல் மற்றும் வீட்டில் இருந்து வேலை செய்யும் மாற்று வழிகளைப் பற்றி விவாதிக்கவும். உங்களின் இடைவேளை நேரங்கள் மற்றும் அலுவலக நேரத்திற்கு பிறகு வேலை செய்தல் என்பது பற்றிய தெளிவான யோசனையை வழங்கவும். இதைச் செய்வதன் மூலம் உங்கள் குழந்தையுடன் அதிக நேரம் விலகியிருப்பதை தவிர்க்கலாம். இ) உங்கள் இடைவேளை நேரத்தைப் பயன்படுத்தவும்:

நீங்கள் வேலை செய்யும் இடத்திற்கு அருகில் வசிக்கிறீர்கள் என்றால், மதிய உணவின் போது உங்கள் குழந்தைக்கு உணவளிக்க நீங்கள் வீட்டிற்கு செல்லலாம். உங்கள் குழந்தையை குழந்தை காப்பகத்தில் விட்டுச் செல்ல விரும்பினால், இடைவேளையின் போது நீங்கள் பார்வையிடக்கூடிய இடத்தில் அல்லது அருகில் உள்ள ஒன்றைத் தேர்தெடுங்கள்.

ஈ) நீங்கள் பாலூட்டும் வழக்கத்தை திட்டமிடுங்கள்:

உங்கள் குழந்தைக்கு பாலூட்டுவதற்கு தினசரி அட்டவணையை அமைக்கவும். நீங்கள் வேலைக்குச் செல்வதற்கு முன்பும், வேலை முடிந்து வீட்டிற்கு வந்த பிறகும் உங்கள் குழந்தைக்கு உணவளிக்கவும். நீங்கள் திரும்பி வருவதற்கு முன்பு குழந்தைக்கு உணவளிக்க வேண்டாம் என்று பராமரிப்பாளரிடம் சொல்லலாம். உங்கள் குழந்தையுடன் மீண்டும் தொடர்பை ஏற்படுத்த இது ஒரு சிறந்த அணுகுமுறையாக இருக்கும். வேலை அதிக நேரம் எடுத்தாள், தாய்ப்பாலையும் பம்ப் செய்யது சேமித்து வைக்கலாம். இது குழந்தைக்கு தடையின்றி தாயின் பாலுக்கான அணுகலை எளிதாக்குகிறது. ) இரவில் பாலூட்டி மகிழுங்கள்:

நீங்கள் வேலை செய்யத் தொடங்கும் போது, இரவில் உங்கள் குழந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்வது மிகவும் சவாலாக இருக்கலாம். ஆனால் தாயின் அரவணைப்பை குழந்தைக்கு கொடுப்பதற்கு இது நல்ல வாய்ப்பாகும். கூடுதலாக, குழந்தை உங்களிடமிருந்து பகல் நேரத்தில் விலகியிருந்தால், இரவில் கூடுதல் உணவை விரும்பலாம். எனவே, உங்கள் தூக்கச் சுழற்சியில் குறிப்பிடத்தக்க நேரம் உங்கள் குழந்தையை அருகில் வைத்திருங்கள்.. ஊ) உதவிக்கு குடும்பத்தினரையும் நண்பர்களையும் சேர்த்துக்கொள்ளவும்:

ஒரே நேரத்தில் பணி, வீடு, குழந்தை வளர்ப்பு ஆகியவற்றை சமநிலைப்படுத்துவது சவாலாக இருக்கலாம். எல்லாவற்றையும் நீங்களே செய்ய முயற்சிப்பதை விட குடும்பத்தினர் அல்லது நண்பர்களிடம் உதவி கேட்கவும். தாய் சோர்வடையும் குழந்தையின் தந்தை உதவலாம். மூத்த குடும்ப உறுப்பினர்கள், உடன்பிறப்புகள் மற்றும் உறவினர்களும் உதவலாம் மற்றும் வீட்டிற்குள் இருக்கும் பொறுப்புகளை பகிர்ந்து கொள்ளலாம்.

எ) உங்கள் சொந்த வாழ்க்கையும் பார்த்துக்கொள்ளவும்:

உங்கள் குடும்பத்தை ஆதரிக்க, நீங்கள் நிறைய முயற்சி செய்கிறீர்கள். இருப்பினும், உங்கள் சொந்த தேவைகளை கவனித்துக்கொள்வதும் முக்கியம். ஆரோக்கியமாக சாப்பிடவும், நிறைய உடற்பயிற்சி செய்யவும், நிறைய தண்ணீர் குடிக்கவும், ரீசார்ஜ் செய்ய தனியாக நேரத்தை ஒதுக்க முயற்சிக்கவும்..

தாய்ப்பாலை ஊக்குவிப்பதற்கான முக்கியமான படி தாய்க்கு அதிகாரம் அளிப்பதாகும். ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு, தாய்மார்களுக்கான ஆதரவுக் குழுக்களை உருவாக்குவது மிகவும் முக்கியமானது, ஏனெனில் குழந்தைகளின் குறிப்புகளை புரிவதில் அவர்களுக்கு தொடர்ந்து உதவி தேவைப்படுகிறது..


இந்த ஆண்டின் கருப்பொருளுக்கு இணங்க, ஒரு குழந்தைக்கு உணவளிப்பது பாலினங்களுக்கு இடையில் எந்த வித்தியாசமும் தேவை இல்லை. ஒரு குழந்தை அவர்களின் உரிமைகளைப் பெறுவதை உறுதி செய்ய வேண்டிய கடமை அனைவருக்கும் உள்ளது. பம்பரமாக வேலை செய்யும் மற்றும் தாய்ப்பால் கொடுக்கும் தாய்க்கு பணியிடத்தில் இருந்து நர்சிங் பிரேக் மற்றும் டே கேர் வசதிகள் போன்ற உதவி தேவைப்படுகிறது. பாலூட்டும் தாய்மார்களுக்கு உதவுவதோடு மட்டுமல்லாமல், தாய்ப்பாலைத் தொடர அனுமதிப்பதன் மூலம் தாய்-சேய் நல்வாழ்வை மேம்படுத்தவும், இவை ஒவ்வொரு பணியிடத்திலும் செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்..

தாய்ப்பாலூட்டுவதற்கும் தாய்மார்களுக்கு அதிகாரமளிப்பதற்கும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என்று உறுதியெடுப்போம்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## கலைஞர் நூற்றாண்டு விழாவினைக் கொள்கைத் திருவிழாவாகக் கொண்டாடுவோம்! திமுக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் உரை



சென்னை, ஆகஸ்ட் 05, 2023: இன்று (05-08-2023) கழகத் தலைவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 'தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா'வினை மாநிலமெங்கும் எழுச்சியுடன் கொண்டாடுவது தொடர்பாக, தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.

அதில் கழகத் தலைவர் ஆற்றிய உரையின் விவரம்:

நம்மை எல்லாம் ஆளாக்கிய தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவதற்காகத்தான், இந்தக் கூட்டம் காணொலி மூலமாக கூட்டப்பட்டிருக்கிறது.

கழகத்தின் சார்பில் நடத்தப்பட வேண்டிய நிகழ்ச்சிகளின் விவரங்களை கழக துணைப் பொதுச் செயலாளர் திரு. ஆ. இராசா அவர்கள் உங்களிடம் விளக்கினார். மாவட்டச் செயலாளர்களும், அணிகளின் செயலாளர்களும் இணைந்து நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை, அவருக்குப் புகழ் சேர்க்கும் விழாவாக - பெருமை சேர்க்கின்ற விழாவாக கொண்டாட வேண்டும். அதைவிட முக்கியமாக அவரின் கொள்கைகளை பரப்புகிற விழாவாக கொண்டாட வேண்டும். மக்கள் பயன்பெறும் விழாவாக கொண்டாட வேண்டும். இது போன்ற விழாக்களின் மூலமாகதான் கழகத் தொண்டர்களுக்கு உற்சாகம் பிறக்கிறது. நமக்கு நாமே உணர்ச்சியை பெறுகிறோம்.

இவை வெறும் கொண்டாட்டமாக இல்லாமல், கொள்கைத் திருவிழாக்களாக இருக்கிறது! கழக நிகழ்ச்சிகள் மூலம் ஆண்டுதோறும் நம்மை தலைவர் கலைஞர் அவர்கள் எப்படி உணர்ச்சி கொள்ள வைத்தாரோ - அதுபோல தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையும் ஆண்டு முழுவதும் நடத்தி கழகத்தை எழுச்சி பெற வைக்க வேண்டும்.

அரசு சார்பிலும் விழாக்கள் நடத்தப் போகிறோம். அரசு சார்பில் நடத்துகிற நிகழ்ச்சிகளுக்கான பரிந்துரைகள் வந்திருக்கிறது. மூத்த அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் அதற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்வார்கள்.

கழகத்தின் சார்பில், நாம் எழுச்சியோடு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். இதற்கு அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் தேவையான உதவிகளை செய்து, எல்லா மாவட்டங்களிலும் நிகழ்ச்சிகள் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றிய – நகர – பேரூர் - பகுதி அளவில் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி நிர்வாகிகளிடம் கலைஞர்-100 நிகழ்ச்சி பற்றி பேசுங்கள். கழக நிர்வாகிகள் உற்சாகத்தோடு பங்கேற்பதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு மாவட்டச் செயலாளர்களான உங்களுக்குத்தான் இருக்கிறது.

தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா என்று சொல்கிறோம் என்றால், அதுவும் தேர்தல் பரப்புரையில் ஒரு அங்கம்தான். தலைவர் கலைஞர் பெயரைச் சொல்லி பொதுமக்களின் கவனத்தை நம்மை நோக்கி ஈர்த்தாக வேண்டும். மக்களை ஈர்க்க கலைஞரே காந்தம்போல் நமக்கு உதவுவார். அவரால் பயன்பெறாத தரப்பினரே இல்லை. அதனால், அந்த அடிப்படையில் கொள்கை விழாக்களாக இவற்றை நடத்த வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாம் இப்போதே தயாராகிவிட்டோம். வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 40-க்கு 40 இடங்களையும் தி.மு.க தலைமையிலான கூட்டணி கைப்பற்றும் வகையில் நம்முடைய பரப்புரையை தொடங்கியிருக்கிறோம். அதன் ஒரு பகுதியாக, வாக்குச்சாவடிதோறும் களப்பணியாற்றும் வகையில் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு வாக்குச்சாவடி பொறுப்பாளர் மற்றும் உறுப்பினர்களின் தீவிரமான களப்பணிதான் கழகத்தின் மாபெரும் வெற்றிக்கு அடித்தளமாக அமையும். கழகத்தின் வியூகத்தை வெற்றியடையச் செய்வது உங்கள் ஒவ்வொருவரின் கடமை. எனவே, வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் நியமனம் மற்றும் அவர்கள் பணிகள் குறித்து மாவட்டச் செயலாளர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து செயல்பட வேண்டும். வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் தேர்தலுக்கு ஆயத்தப்படுத்தும் விதமாக ஒவ்வொரு மண்டலமாக பயிற்சிக் கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டு, அதன்படி ஒவ்வொரு மண்டலமாக பயிற்சி பாசறைக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

முதல்கட்டமாக, டெல்டா மாவட்டங்களுக்கான வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தை திருச்சியில் வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறோம். அது, அந்த மாவட்டச் செயல்வீரர்களுக்கு மட்டுமல்ல, எல்லோரையுமே உற்சாகப்படுத்தும் வகையில் இருந்தது. வரும் 17-ஆம் தேதி தென் மண்டல மாவட்டங்களுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டம் ராமநாதபுரத்தில் நடைபெற இருக்கிறது. தென் மாவட்டங்களின் மாவட்டக் கழகச் செயலாளர்கள் வாக்குச்சாவடி பொறுப்பாளர்களின் கூட்டங்களை நடத்தி அவர்களை அழைத்து வருவதற்கான பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும்.

இன்னொன்று ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்! வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கான பாசறைக் கூட்டங்களை நடத்துவதோடு நம்முடைய வேலை முடிந்துவிடாது. வரும் நாடாளுமன்ற தேர்தலுக்கான பரப்புரையின் தொடக்கம் மட்டும்தான் அது! அதனால், நாடாளுமன்றத் தேர்தலுக்கான அடுத்தக்கட்ட பணிகளையும் தொடங்க வேண்டும். கழகத்தின் சாதனைகள் மற்றும் கழக அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்வதற்கான கருவியாக வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் செயல்பட வேண்டும். ஒவ்வொரு நூறு வாக்காளருக்கும் ஒரு பொறுப்பாளர் என்று வாக்குச்சாவடி உறுப்பினர் நியமனம் செய்கிற பணிகளும் எல்லா மாவட்டங்களிலும் நிறைவடைந்திருக்கிறது.

வாக்குச்சாவடி பொறுப்பாளர்களை போலவே, எல்லா வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களையும் தலைமைக் கழகத்திலிருந்து அழைத்து சரிபார்க்கிற பணியை மேற்கொள்ளச் சொல்லியிருக்கிறேன். சரிபார்ப்புக்குப் பின், வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களில் ஏதாவது மாற்றங்கள் இருந்தால் அதையும் செய்து முடித்து, எல்லா வாக்குச்சாவடிகளிலும்பணிகளை முழுமையாக முடித்து அவங்களுக்கான அடுத்தடுத்த பணிகளை தொடங்க வேண்டும்.

ஒவ்வொரு வாக்குச்சாவடி குழுவிலும் தங்களுக்குரிய முரண்பாடுகள் எதுவும் இல்லாமல், ஒற்றுமையாக வேலை செய்கிற வகையில் எல்லா செயல்பாடுகளும் இருக்க வேண்டும். டெல்டா மாவட்டங்களில் பாசறைக் கூட்டம் முடிந்துவிட்டதால், அந்த மாவட்டங்களில் ஒவ்வொரு வாக்குச்சாவடி வாரியாக நூறு வாக்காளர்களைப் பிரிக்கிற பணி, வாக்காளர்களின் விவரங்களை சேகரிக்கும் பணி மற்றும் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை சரிபார்க்கும் வேலையை உடனடியாக தொடங்க வேண்டும். அதற்கான முன்னெடுப்புகளை மாவட்டச் செயலாளர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாஜகவை பொறுத்தவரையில் இது அவர்களுக்கு வாழ்வா சாவா - என்ற தேர்தல்! மீண்டும் ஆட்சியை பிடிக்க எதையும் செய்வார்கள். தமிழ்நாட்டில் அவர்கள் எடுக்கின்ற முயற்சிகள் எல்லாம் தோல்வி அடைந்து இருக்கிறது. அதனால் கோபம் அதிகமாகும். நம்மை நோக்கிப் பாய்வார்கள்.

கடந்த காலங்களில், இது மாதிரி பல தடைகளை சமாளித்துத்தான் நம்முடைய கழகம் வெற்றி பெற்று இருக்கிறது. இந்த முறையும் நாம் முழுமையான வெற்றியைப் பெற வேண்டும்! அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம் எனக் கூறி நிறைவு செய்கிறேன். நன்றி! வணக்கம்! இவ்வாறு அவர் உரையாற்றினார்.

## டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் இந்தியாவில் புதிய வெல்ஃபயரை வெளியிட்டது




சென்னை, ஆகஸ்ட் 05, 2023: டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் இன்று இந்திய வாகனத் துறையில் நுட்பம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றின் சாரத்தை மறுவரையறை செய்யும் ஆடம்பரமான சுய-சார்ஜிங் வலிமையான ஹைபிரிட் எலக்ட்ரிக் மாஸ்டர் பீஸ் என்ற மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஆல்-நியூ வெல்ஃபயரை அறிமுகப்படுத்தியது. ஆல்-நியூ வெல்ஃபயர் சிறந்த சௌகரியம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட இயக்கம், கட்டளையிடும் சக்தி மற்றும் ஆற்றல்மிக்க திறன் ஆகியவற்றை வழங்குகிறது, இது ஓட்டுநர் அனுபவத்தை அசாதாரண உயரத்திற்கு உயர்த்துகிறது. தடையின்றி தொழில்நுட்பம் மற்றும் சிந்தனைமிக்க வசதிகளுடன் வடிவமைக்கப்பட்ட இந்த வாகனம் ஒவ்வொரு பயணத்திலும் வசதியையும் செழுமையையும் உள்ளடக்கியது.

ஆல்-நியூ வெல்ஃபயர் ஒரு சக்திவாய்ந்த செயல்திறனை வழங்கும் அதே வேளையில், இது குறைந்த எரிபொருள் நுகர்வு மற்றும் கார்பன் தடயங்களையும் உறுதி செய்கிறது. வெல்ஃபயர் ஒரு வலுவான ஹைபிரிட் மின்சார வாகனம், ஆய்வுகளின் படி எஸ்எச்ஈவிகள் 40% தூரத்தையும் 60% நேரத்தை மின்சாரத்திலும் பூஜ்ஜிய மாசு பயன்முறையில் எஞ்சின் ஆஃப் செய்யும்போது இயக்க முடியும் என்பதைக் காட்டுகிறது.

இந்தியாவில் டொயோட்டாவின் ஆல்-நியூ வெல்ஃபயர் அறிமுகம் குறித்த தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டாரின் நிர்வாக இயக்குநரும், தலைமைச் செயல் அதிகாரியுமான திரு. மசகாசு யோஷிமுரா, "இன்று நமது இந்தியப் பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லைக் குறிக்கிறது. டொயோட்டாவின் முன்னணி தொழில்நுட்பம், ஆறுதல் மற்றும் நேர்த்தியின் சின்னம். பசுமையான எதிர்காலத்தைத் அதே வேளையில், ஆடம்பரத்தின் உச்சத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த தலைசிறந்த படைப்பை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இது 'கார்பன் நியூட்ராலிட்டி' அடைவதற்கான பல வழிகளைப் பின்பற்றுவதன் மூலம் எங்களின் இடைவிடாத முயற்சிகளை மேலும் பிரதிபலிக்கிறது. நடுநிலைமை, மற்றும் 'இந்திய அரசாங்கத்தின்' வழிகாட்டுதலுக்கு இணங்க, அனைவருக்கும் சிறந்த நாளை உருவாக்க நாங்கள் பாடுபடுவதால், வெகுஜன மின்மயமாக்கல் மற்றும் நிலையான இயக்கத்தை வழங்குவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

டொயோட்டாவின் சமீபத்திய ஆஃபர் குறித்து, டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டாரின் விற்பனை மற்றும் ஸ்ட்ராடெஜிக் சந்தைப்படுத்தல் துணைத் தலைவர் திரு. அதுல் சூட் பேசுகையில், "இந்தியச் சந்தையில் புதிய வெல்ஃபயர் அறிமுகமானது, எங்களின் சிறப்பை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. சந்தையின் விவேகமான விருப்பங்களைப் புரிந்துகொண்டு, வாகனத் துறையில் எல்லைகளைத் தள்ளவும் புதிய வரையறைகளை அமைக்கவும் முயற்சி செய்கிறோம். ஆல்-நியூ வெல்ஃபயர், அதன் சுத்திகரிக்கப்பட்ட அழகியல் மற்றும் மேம்பட்ட அம்சங்களுடன், ஒரு புதிய அளவிலான செழுமையையும் நுட்பத்தையும் கொண்டு வருகிறது. வாகனத்தின் விசாலமான உட்புறங்கள் மற்றும் மகிழ்ச்சியின் புகலிடத்தை வழங்குகின்றன, இது பயணிகளை ஆடம்பர உலகில் உண்மையிலேயே மூழ்கடிக்க அனுமதிக்கிறது. தனித்துவமான வடிவமைப்பு மற்றும் உள்ளுணர்வு கட்டுப்பாடுகள் மூலம், இந்த புதிய மாடலின் ஒவ்வொரு அம்சமும் வாகனம் ஓட்டுவதை சிரமமின்றி மற்றும் சுவாரஸ்யமாக மாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது

ஆல்-நியூ வெல்ஃபயர் டெலிவரி நவம்பர் 2023 முதல் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த புதிய அறிமுகத்தின் மூலம், இந்தியாவில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, கடந்த 4 ஆண்டுகளில் வெல்ஃபயர் பிராண்ட் தனக்கென ஏற்படுத்தியிருக்கும் தேவையை மேலும் உயர்த்துவதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். முடிந்தவரை சிறந்த விநியோகத்தை அதிகரிக்கவும், அனைத்து புதிய வெல்ஃபயரை சரியான நேரத்தில் மற்றும் சரியான இடத்தில் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கவும் நாங்கள் எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறோம்.

2023 நவம்பரில் ஆல்-நியூ வெல்ஃபயர் டெலிவரி தொடங்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், முன்பதிவுகள் இன்று தொடங்கும். வாடிக்கையாளர்கள் ஆன்லைனில் https://www.toyotabharat.com/online-booking/ அல்லது அருகிலுள்ள டொயோட்டா டீலர்ஷிப்பைப் பார்வையிடலாம். மேலும் விவரங்களுக்கு, வாடிக்கையாளர்கள் டொயோட்டா இந்தியா | இல் உள்நுழையலாம் அதிகாரப்பூர்வ இணையதளம் (toyotabharat.com).

## போலீசாரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை இரட்டிப்பாக உயர்வு: தமிழக அரசு அறிவிப்பு



சென்னை ஆகஸ்ட் 05 2023: போலீசாரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகையை இரட்டிப்பாக உயர்த்தி வழங்குவதற்கு தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-

போலீசாரின் குழந்தைகளுக்கு சிறப்பு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் மூலம் தற்போது 100 மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் 4 ஆண்டுகளுக்கு வழங்கப்படுவது, எண்ணிக்கை உயர்த்தப்பட்டு 200 மாணவர்களுக்கு தலா ரூ.30 ஆயிரம் வீதம் வழங்கப்படும் என்றும், போலீசாரின் குழந்தைகளுக்கு கல்விப்பரிசுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் பரிசுத்தொகை இரட்டிப்பாக்கப்படும் என்றும், 2023-ஜூன்24-ம் ஆண்டிற்கான காவல்துறை மானியக்கோரிக்கையின் போது தமிழ்நாடு முதலமைச்சரால் சட்டசபையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், போலீசாரின் குடும்பத்தைச்சார்ந்த 200 மாணவர்களுக்கு தலா ரூ.30 ஆயிரம் ரூபாய் வீதம் 4 ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.2 கோடியே 40 லட்சம் கோடியில் சிறப்பு கல்வி உதவித்தொகை வழங்கப்பட உள்ளது.

மேலும், 37 காவல் மாவட்டங்கள் மற்றும் 9 காவல் ஆணையரகங்களில் பணிபுரியும் போலீசாரின் குழந்தைகளுக்கு கல்விப்பரிசுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்-2 வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முறையே முதல் 10 இடங்களை பெறும் 460 மாணவ - மாணவிகளுக்கு தற்போது வழங்கப்படும் மொத்த கல்வி பரிசுத்தொகையை ரூ.28 லட்சத்து 29 ஆயிரத்தில் இருந்து ரூ.56 லட்சத்து 58 ஆயிரமாக இரட்டிப்பாக்கி கல்விப்பரிசுகள் வழங்கவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

உயர்த்தப்பட்ட சிறப்பு கல்வி உதவித்தொகை மற்றும் கல்விப்பரிசுகள் வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்காக, தமிழ்நாடு காவலர் நல நிதிக்கு அரசால் தற்போது வழங்கப்பட்டு வரும் மானியத்தொகையினை ரூ.1 கோடியே 20 லட்சத்தில் இருந்து ரூ.2 கோடியே 96 லட்சத்து 58 ஆயிரமாக உயர்த்தியும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
சனிக்கிழமை,
ஆகஸ்ட் 05, 2023

# உலகிலேயே மிகப்பெரிய தன்னார்வ அமைப்புகளில் ஒன்றான டி பி டி டபிள்யு ஓ-வின் (ஆர் எஸ் பி) சாலை பாதுகாப்பு ரோந்து திட்டத்தை சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சந்திப் ராய் ரத்தோர் துவக்கி வைத்தார்























சென்னை ஆகஸ்ட் 05 2023: சாலை விபத்துகள் குறைப்பதில் பொதுமக்களிடையே சாலை பாதுகாப்பு மற்றும் கல்வி விழிப்புணர்வை ஏற்படுத்துவது ஒரு முக்கிய அம்சமாகும். நிசிஜிறி இந்த உண்மையை உணர்ந்து, வி எம் எஸ் போர்டுகளை காட்சிப்படுத்துதல், பல்வேறு சந்திப்புகளில் ஆடியோ செய்திகள் மற்றும் போக்குவரத்து ஒழுங்குமுறை குறித்து பள்ளிக் குழந்தைகளுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் போக்குவரத்து கல்வி விழிப்புணர்வுவை ஏற்படுத்த சாலைப் பாதுகாப்பு ரோந்து கேடட்களாக அவர்களைச் சேர்ப்பது போன்ற பல்வேறு வழிகளில் சாலைப் பயனாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

தமிழ்நாடு காவல்துறை போக்குவரத்துக் வார்டன் அமைப்பு (டி பி டி டபிள்யு ஓ) உலகிலேயே மிகப்பெரிய தன்னார்வ அமைப்புகளில் ஒன்று ஆகும். அதன் தலைமை துறையான சென்னை பெருநகர போக்குவரத்துக் காவல்துறையுடன் இணைந்து "சிகிஜிசிபி ஜிபிணிவி சீளிஹிழிநி" என்ற கருத்தின் கீழ் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை சாலைப் பயனாளர்களுக்கு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், 7ம் வகுப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட பள்ளிக் குழந்தைகள் சாலைப் பாதுகாப்பு கேடட்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். சாலை பாதுகாப்பு கேடட்களுக்கு சாலை பாதுகாப்பு மற்றும் அதன் நடைமுறைகள் குறித்த பல்வேறு அம்சங்கள் குறித்து போக்குவரத்து காவலர்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது. விழாக் காலங்களில் போக்குவரத்து நிர்வாகத்தில் மூத்த ஆர் எஸ் பி கேடட்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு 18,000 மாணவர்களைக் கொண்ட 230 பள்ளிகள் ஆர் எஸ் பி யில் பதிவு செய்யப்பட்டன. இந்த ஆண்டு இந்த பலம் 27,154 ஆர் எஸ் பி கேடட்களுடன் 354 பள்ளிகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு சாதனை ஆகும்.

ஆர் எஸ் பிகளுடன் ஒருங்கிணைக்க ஆசிரியர்களுக்கு ஜூலை 8, 2023 அன்று பயிற்சி அளிக்கப்பட்டது. ஒரு நாள் பயிற்சியில் 284 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர், இதில் அவர்களுக்கு பயிற்சி மற்றும் சாலை பாதுகாப்பு நடைமுறைகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சந்தீப் ராய் ரத்தோர் 02.08.2023 அன்று சாலை பாதுகாப்பு ரோந்து (ஆர் எஸ் பி) 2023-24 திட்டத்தை 02.08.2023 அன்று காலை, புதுப்பேட்டை, ராஜரத்தினம் மைதானத்தில் கூடுதல் காவல்துறை ஆணையாளர் (போக்குவரத்து) கபில் குமார் சரத்கர், முன்னிலையில் துவக்கி வைத்தார். கேடட்களுக்கு ஆர்எஸ்பி உறுதிமொழி ஏற்கப்பட்டது. தலைமைப் போக்குவரத்துக் வார்டன் ஹரிஷ் எல் மேத்தா விழாவில் பங்கேற்றவர்களை வரவேற்றார், துனை தலைமைப் போக்குவரத்துக் வார்டன் அசீம் அகமது, ஆர்.எஸ்.பி அறிக்கையையும், துனை தலைமைப் போக்குவரத்துக் வார்டன் எஸ் ஐ தௌலத் ஆர் எஸ் பி கேடட்கள் பெருமளவில் வர எற்பாடு செய்திருந்தார், ஆர்.நாராயணன், துனை தலைமைப் போக்குவரத்துக் வார்டன் நன்றியுரை வழங்கினார்.

இந்நிகழ்வில் சுமார் 4,000 பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டனர். சாலை விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. ஆர் எஸ் பி அறிக்கையை அசீம் அகமது, துணை தலைமை வார்டன் வழங்கினார். ஆர்எஸ்பி உறுதிமொழி கூடுதல் காவல் ஆணையாளர் (போக்குவரத்து) கபில் குமார் சி சரத்கரால் நிர்வகிக்கப்பட்டது. ஆர்பிட்டில் இருந்து அமித் அகர்வால் ஆர் எஸ் பி கேடட்ஸ் கையேடு பிரிண்ட் செய்ய ஒத்துழைத்து நிதியுதவி செய்ததற்காக பாராட்டப்பட்டார். ஆர்எஸ்பி கேடட்களின் சேர்க்கை மற்றும் பயிற்சியில் பங்களித்த 40 ஆர்எஸ்பி கேடட்கள் 20 பள்ளி முதல்வர்கள் 16 போக்குவரத்து காவலர்கள் மற்றும் 12 போக்குவரத்து காவலர்களுக்கு காவல் ஆணையாளர் விருதுகளை வழங்கினார். புதிய ஆர்எஸ்பி கேடட் கையேடு மற்றும் நினைவுப் பரிசையும் சென்னை பெருநகர காவல்துறை ஆணையாளர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.